DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**CC.No.118/2022**

Deposition of witness for Prosecution அ.சா.7

| | | |
|---|---|---|
| பெயர் | : | நாராயனி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | வேல்முருகன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 07.04.2026

2,4 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சென்னை குரோம்பேட்டையில் வசிக்கிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 15.01.2021ம் தேதி காலை 11 மணிக்கு மாட்டுப்பொங்கலை ஊரோடு சேர்ந்து உஞ்சனை மங்களத்தில் உள்ள மந்தையில் பொங்கல் வைத்தோம். அப்போது எதிரிகள் அனைவரும் என் அப்பா சொர்ணலிங்கத்தையும் என் அம்மா தனலெட்சுமியையும் அசிங்கமாக கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள். என் அப்பாவை இறந்துபோன 3ம் எதிரி அடித்தார். என் அப்பாவை அடிப்பதை நான் தடுக்கபோனபோது 2ம் எதிரி என்னை தடுத்து என் கழுத்தில் இருந்த செயினை

அத்துவிட்டார். பின்பு 4 பேரும் சேர்ந்து உங்களை கொல்லமால் விடப்போவதில்லை இந்த வீட்டை வீட்டு வெளியே போங்கள் என்று சொல்லி அடிக்கவந்தார்கள். ஊரில் உள்ளவர்கள் தடுத்து அவர்களை விலக்கிவிட்டார்கள். பின்பு 17ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். செயின் அத்ததில் என் கழுத்தில் காயம் ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அ.சா.1 என் அப்பா. 1ம் எதிரியும் அ.சா.1ம் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் என் அப்பா 1ம் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லியுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. 1ம் எதிரிக்கும் சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 15 ம் தேதி நடந்த சம்பவத்திற்கு 17 ம் தேதிதான் காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். யார் யார் அடித்தார்கள் யார் யார் என்ன பேசினார்கள் என்று குறிப்பிட்டு போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 15ம் தேதி ஊரோடு சேர்ந்து பொங்கல் வைக்கும்போது சுமார் 100, 150 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். 1ம் எதிரிக்கும் என் அப்பாவிற்கும் குடும்ப பிரச்சனை இருந்தது என்றால் சரிதான் சொத்து பிரச்சனை இருந்தது. 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் அப்படி உண்மையில் சம்பந்தம் இருந்திருந்தால் என் அப்பா நீதிமன்றத்தில் வந்து 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லியிருக்க மாட்டார் என்றால் சரியல்ல. பொங்கல் அன்று 150 பேர் இருக்கும்போது சம்பவம் நடந்திருந்தால் சம்பவ சாட்சிகளாக வெளி நபர்களை

விசாரித்திருப்பார்கள் என்றும் நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>2,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் எம்.காம் படித்துள்ளேன். சம்பவம் தொடர்பாக என் தந்தை காவல் நிலையத்தில் என்ன புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார் கொடுக்கும்போது நானும் உடன் இருந்தேன் என்றால் சரிதான். புகாரை நான் எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை என் தந்தையே எழுதினார். புகாரை 17.01.2021ம் தேதி கொடுத்தோம், புகார் கொடுத்த நேரம் தற்போது நினைவு இல்லை. என் அப்பா புகாரை எழுத்துப்பூர்வமாக எழுதி கொடுத்தார். சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் ஞாபகமில்லை. போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் நினைவில்லை. சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை. கழுத்தில் ஏற்பட்ட காயத்திற்கு எந்த மருத்துவமனையிலும் உள்நோயாளியாகவே, வெளிநோயாளியாகவோ சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான், சிறு சிறு காயங்கள் தான் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கோ, நகையை அத்ததற்கோ நான் தனிப்பட்ட விதத்தில் குறிப்பிட்டு எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்டதாக ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின்போது எதிரிகள் ஆயுதங்கள் எதுவும் பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல, 1ம் எதிரி கம்பு வைத்திருந்தார், மற்ற எதிரிகள் யாரும் ஆயுதம் பயன்படுத்தவில்லை. சம்பவம் நடந்த சமயத்தில் என் அப்பாவும், 1ம் எதிரியும் ஒரே அணியாகவும் மற்ற எதிரிகள் ஒரு அணியாகவும் இருந்தார்கள் என்றால் சரியல்ல. 1ம்

எதிரியும் என் அப்பாவும் கூட்டாக இருந்து கொண்டு சொத்தை விற்றுக் கொண்டிருந்தார்கள் என்று அதனால் மற்ற எதிரிகள் ஒரு தரப்பாகவும் என் தந்தையும் அ.சா.1ம் ஒரு தரப்பாகவும் இருந்து ஒருவர் மற்றவர்கள்மீது மாறி மாறி வழக்கு தொடுத்திருந்தார்கள் என்றால் சரியல்ல, 1ம் எதிரி எந்த காலத்திலும் என் அப்பாவுடன் இருந்ததில்லை எதிரிகள் அனைவரும் சேர்ந்து அவர்கள்தான் எங்கள் மீது வழக்கு கொடுத்தார்கள் நாங்கள் எந்த வழக்கும் கொடுக்கவில்லை. ஆறாவயல் காவல் நிலையத்தில் என் அப்பா எதிரிகளை தாக்கியதாகவும் எதிரிகள் என் அப்பாவை தாக்கியதாகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்பு சமரசமாக முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் எதிரியை நான், என் அப்பா, என் சகோதரி மற்றும் 1ம் எதிரி ஆகியோர்கள் சேர்ந்து வீட்டை விட்டு விரட்டி விட்டதாக இதே நீதிமன்றத்தில் DVC.9/2024 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கை ஆட்சேபத்தி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மேற்படி வழக்கை ரத்து செய்யக்கோரி மனுத்தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 2ம் எதிரியும் அவருடைய பிள்ளைகளும் சேர்ந்து 1ம் எதிரி மீதும் என் அப்பா மீதும் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் அ.சா.1ன் தூண்டுதல்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஊர்மக்கள் கூடும் பொது இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் சம்பவ இடத்தில் போலீசார் பாதுகாப்பு கொடுத்திருந்தார்கள் என்றால் இல்லை.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.